அண்ணல் ராமபிரானின் மனம்தனை அறிந்து அவன் எண்ணமீடேற ।
எண்ணற்ற அசுரர்களைக் கொன்று  உன்தன் திறமதைக் காட்டியவரே! ॥
மூலிகைமலையாம் சஞ்சீவியைக் கொண்டு இலக்குவன் உயிர்காக்க ।
ஆலிங்கனம் செய்த ராமனின் உயர் பண்பு கண்டு மகிழ்ந்தாயன்றோ! ॥
அந்த ரகுநந்தனும் உம் பெருமைகளைப் பற்றி வானளாவ புகழ்ந்து ,।
எந்த ஒருவருக்கும் கிடைக்காத பரதனுக்கு ஈடாக கருதினானன்றோ ॥
ஆதியந்தம் இல்லாத ஸ்ரீராமனும் உம்முடைய பலத்தைப் புகழ்ந்து ।
ஆதிஸேஷனும் பாடுவதாகக்கூறி உம்மை புல்லரிக்க செய்தானன்றோ ॥
மற்றரிஷிகள், ஸநகாதிமுனிவர், நான்முகன் உள்ளிட்ட தேவதைகள் ।
பற்றற்ற நாரதன், சாரதரும் உம்மைப் போற்றி பாடுகின்றனர் அன்றோ ॥
பட்டென்று உயிர் பறிக்கும் எமதர்மனும், வாரி வழங்கிடும் குபேரனும், ।
எட்டுதிக்குகளை காப்பவர்களும் பாடி மகிழ்ந்திடுவர் உம்பெருமையை ॥
ரகுகுல திலகமாம் இராமனின் உயர்ந்த கருணை உள்ளத்தால் நீரும் ।
வெகு விரைவில் சுக்ரீவனுக்கும் முடிசூட்டி வைத்தாய் இல்லையா ॥
இலங்கையின் மன்னனாக விபீஷணனுக்கு பட்டாபிஷேகம் செய்யும் ।
இலக்கும் உன்தன் பெரும் முயற்சியாலன்றோ இறுதியில் ஈடேறியது ॥
கோடிமைல்கள் தூரம், சிறுவனாக இருந்த நீரும் கனியென நினைத்து ।
நாடியேச்சென்று அந்த சூரியனையே விழுங்கிட நினைத்தாய் அன்றோ ॥
பரந்த பெரும் கடலையும், உமது வாயில் மோதிரத்தைக் கவ்வியபடியே ।
பறந்துச் சென்று சீதையைக்கண்டு அவளிடம் சேர்த்திட சென்றாயன்றோ॥ 20
உலகில் தோன்றிடும் துன்பங்கள் எல்லாம் ஒருக் கணப் பொழுதினில் ।
விலகியோடும் படி செய்திடும் உன் சக்தி என்பது யாவரும் அறிந்ததே॥
ஒருவரும் உன்தயவும், கருணையும் இன்றி, அந்த திவ்ய தமபதிகளான
இருவரையும், நெருங்க முடியாது என்பது உண்மையான விஷயமாகும்॥

சகலவிதமான துன்பங்களும் உன்தனுடைய திருக்கரங்களின் தயவினால்।
அகல, உலகிலுள்ள மக்களெல்லோரும் இன்பம் அடைந்திடுவர் அன்றோ ॥
நீ ஒருவன்மட்டுமே, உன் திருவருளால் வெற்றிகளைத் தர வல்லவன் ।
நீ கூவினால் மூன்று உலகங்களும் நிலைகுலைந்து நடுங்கிடுமன்றோ॥
எவர்கள் உன்தன் திருநாமத்தை சிரத்தையுடன் உச்சரிக்கின்றார்களோ ।
அவர்கள் பக்கலில் பேய், பிசாசு எதுவுமே நெருங்காது என்பது உண்மை ॥
அனைத்து துன்பங்களும், வியாதிகளும்நொடிதில் மறைந்திடும் உன்னை ।
நினைத்து உன்தன் திருநாமங்கள்தனை உநுதினமும் சொல்பவர்களுக்கு ॥
இதயத்தில் உம்மை வைத்து மக்கள் செய்கின்ற செயல்கள் எல்லாமுமே।
உதயமாகும் சிறந்த பக்தியால் துன்பங்கள் அனைத்தையும் விரட்டிவிடும்॥
தவவலிமை மிக்கவர்களின் மிகச்சிறந்த இருப்பிடமாக விளங்கும் நீயுமே।
துவளாமல், ராமனுடன் இருந்து அவன் செயல்களை முடித்தாயன்றோ ॥
மனத்திலுள்ள தங்கள் ஆசைகள் அனைத்தும் நன்கு நிறைவுபெற்றிட ।
மனத்தை உன்தனிடமே செலுத்தித் தியானிப்பர் மக்கள் எல்லோரும் ॥
யுகங்கள் நான்கும் அறிந்திடும் உன்தனது வலிமையையும், புகழையும்।
இக, பர உலகங்களில் உன்தன் சக்தியும் புகழும் பரவி இருக்கின்றன ॥ 30
தீயசக்திகளை அறவே அழித்து சாத,முனிவர்களை நீர் காத்ததினால்।
தூயவனான ஸ்ரீராமனும் உந்தன்மீது அன்பை பொழிந்தானன்றோ ॥
சித்திகள் எட்டும், நவநிதிகள் ஒன்பதும் எமக்கு அளிக்கவல்ல ।
சக்திகளை அன்னை ஜானகியின் அருளால் கைவரப்பெற்றவனே ॥
ரகுகுல திலகமாம் ராமனுக்கு எல்லா நேரங்களிலும் உடனிறுந்து ।
வெகுவாக சேவைசெய்திட எப்போதும் தயாராக இருப்பவன் நீயே ॥
எவர் துன்பத்திலிருந்து மீண்டு ராமனையடைய விரும்புகிறார்களோ।
அவர் உன்தன் திருநாமத்தை சொல்லி பஜனை செய்தாலேமுடியும் ॥

இறுதிகாலத்தில் ராமனின் திருவடியை அடைந்திட நினைப்பவர்கள் ।

உறுதியாக உன்அருளால் அந்த ஸ்ரீஹரியின் உலகை எய்துவார்கள்॥

வேறு எந்த கடவுளையும் நாடிச்சென்றிட வேண்டிய அவசியமில்லை ।

பேறு பெற்றவர்களான உம் பக்தர்கள் எந்த நாளிலும் இதுஉண்மை॥

துன்பங்கள் தாமே விலகியே ஓடிவிடும் உம்மை நம்பியவர்களுக்கு ।

இன்பமும் தாமே கிடைக்கப்பெற்று மகிழ்ந்திடுவர் தம் வாழ்க்கையில்॥

வெற்றி, வெற்றி, வெற்றிமேல் வெற்றி என என்றும் உண்டாகட்டும்।

பற்றிடும் அன்பர்களுக்கு உம்பாத கமலங்களை என்றும் குருதேவா ॥

நூறுமுறை இந்த ஸ்லோகத்தை தினமும் உச்சரிப்பவர்கள் எல்லா ।

பேறுபெற்றவர்களாகி இவ்வுலக துன்பத்திலிருந்து அறவே விடுபடுவர்॥

எந்த ஒரு துன்பத்திலிருந்தும் கடிதில் விடு பட்டவர்கள் ஆவார்கள் ।

இந்த அநுமன் துதி நாற்பதையும் நாற்பது முறை உச்சரித்தவர்கள் ॥ 40.

ஹரியின் மிகச்சிறந்த பக்தரான கோஸ்வாமி துளஸி தாஸரால் ।

பிரியாது அநுமனே என் மனதினில் என்றும் தங்கி அருளவேண்டும் ॥

# பல ஸ்ருதி

சங்கடங்களை விலக்கியே வாழ்வினில்,

மங்களங்களை நமக்கு வாரி வழங்கிடும் ;

தாயுடன், ராம, லஷ்மணர்களுடன்கூடிய,

வாயுக் குமாரனை நாமும் வணங்கிடுவோம் !